
விஜயபாரதம்
மின்னணு தின இதழ் (தனிச்சுற்று) VIJAYABHARATHAM DAILY
பிலவ, ஆனி - 22 செவ்வாய் 06.06.2021 மலர் - 2, இதழ் - 91

# எம்.ஆர்.எம்மில் ஆர்.எஸ்.எஸ். தலைவர் பேச்சு

முஸ்லிம் ராஷ்ட்ரிய மஞ்ச் (எம்.ஆர்.எம்) கூட்டம், உத்தரப்பிரதேச மாநிலம் காசியாபாத்தில் நடந்தது. அந்த கூட்டத்தில் கலந்துகொண்டு பேசிய ஆர்.எஸ்.எஸ் தலைவர் மோகன்பாகவத், 'பாரதத்தில் உள்ள முஸ்லிம்களை தேசத்தை விட்டு வெளியேறுமாறு கூறுபவர்கள் ஹிந்துக்களே அல்ல. வழிபாட்டை வைத்து யாரும் மக்களை வேறுபடுத்த முடியாது. கடந்த 40,000 ஆண்டுகளாக நாம் அனைவரும் ஒரே மூதாதையர்களின் வழி வந்தவர்கள் என்பது நிரூபிக்கப்பட்டு இருக்கிறது. பாரத மக்கள் அனைவருக்கும் ஒரே மரபணுதான் இருக்கிறது. ஆர்.எஸ்.எஸ் அமைப்பைப் பொறுத்தவரை, பாரதம் போன்ற ஒரு ஜனநாயக நாட்டில், ஹிந்துக்கள், முஸ்லில்கள் ஆதிக்கம் என்பதைவிட இந்தியர்கள் ஆதிக்கம் என்ற நிலையைத்தான் விரும்புகிறோம். பசு புனிதமானது. அதனை கொல்வது தவறு, அதுபோல் ஒரு மனிதனை கொல்வதும் ஹிந்து தர்மத்திற்கு எதிரானது. அவர்கள் மீது சட்டம் கடும் நடவடிக்கை எடுக்க வேண்டும். மக்களை ஒற்றுமைப்படுத்தி, தேசத்தைக் கட்டமைக்கவே நாங்கள் விரும்புகிறோம். மக்களை ஒன்றிணைக்கும் பணியை அரசியல் கட்சிகளிடம் விட முடியாது, அவர்களால் மக்களை இணைக்கும் கருவியாக செயல்பட முடியாது, சில நேரங்களில் சிதைக்கவும் செய்யலாம். பாரதத்தில் இருக்கும் முஸ்லிம்கள் ஆபத்தில் இருக்கிறார்கள் என்கிற சதி வலையில் சிக்கிக் கொள்ள வேண்டாம். முஸ்லிம்களுக்கு எந்த விதமான ஆபத்தும் இங்கு இல்லை. நாட்டில் ஒற்றுமை இல்லை என்றால் வளர்ச்சி சாத்தியமில்லை. மக்கள் அனைவரும் ஒற்றுமையாக இருந்தால்தான் நாட்டின் வளர்ச்சி சாத்தியம்' என கூறினார்.

விஜயபாரதம்



# திருந்தாத தி.மு.க.

அதிமுக இணை ஒருங்கிணைப்பாளர் எடப்பாடி கே. பழனிசாமி வெளியிட்டுள்ள அறிக்கையில், 'சொன்னதை செய்வோம் செய்வதை சொல்வோம்' என்று பிரச்சாரம் செய்து ஆட்சிக்கு வந்த தி.மு.க ஆட்சியாளர்களின் சொல் வேறு, செயல் வேறாக உள்ளது. ஆட்சிக்கு வந்தவுடன் கருத்து சுதந்திரம் என்ற பெயரில், அ.தி.மு.க அரசினை தரக் குறைவாக விமர்சித்ததற்காக பதிவு செய்யப்பட்ட அனைத்து வழக்குகளும் திரும்பப் பெறப்படும் என்று அறிவித்துள்ளார் ஸ்டாலின். ஆனால், சுமார் 120 அ.தி.மு.க உறுப்பினர்களிடம், சமூக வலைதளங்களில் பதிவிட்ட உங்கள் பதிவுகளை உடனடியாக நீக்க வேண்டும். இல்லையெனில் உங்கள் மீது வழக்கு தொடுக்கப்படும் என்று மிரட்டி வருகிறார்கள். 2 ஆண்டுகளுக்கு முன்பு, திமுக குறித்து சமூக வலைதளங்களில் பதியப்பட்ட கருத்துக்களுக்காக இப்போது வழக்கு போடப்படுகிறது. ஒரு தனியார் நிறுவன செய்தி தொலைகாட்சி உட்பட, தகவல் தொழில்நுட்பப் பிரிவைச் சேர்ந்த பலர் மீது வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளது. மாற்றாரை எந்த அளவுக்கு தரம் தாழ்ந்து விமர்சித்தாலும், அது கருத்து சுதந்திரம். அதுவே தங்களை நாகரீகமாக விமர்சித்தாலே, அது பெரிய குற்றம் என கருதி காவல்துறையினரை ஏவி வழக்கு தொடுப்பது, கட்சியினரை விட்டு மிரட்டுவது போன்ற திமுகவினருக்கே உரித்தான செயல்களைப் பார்க்கும்போது, தி.மு.கவினர் இன்னும் மாறவில்லை என்பது தெளிவாகிறது. தமிழ்நாட்டு மக்கள் நலனில் அக்கறை கொள்வதை விடுத்து, பொய் வழக்கு தொடுப்பதில் நாட்டம் செலுத்திவரும் திமுக அரசு, மக்கள் விரோதப் போக்கை உடனடியாக நிறுத்திக்கொள்ள வேண்டும்' என்று கேட்டுக் கொண்டுள்ளார்.

விஜயபாரதம்



# இந்து முன்னணி கோரிக்கை



விஜயபாரதம்

கோவை மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் இந்து முன்னணியினர் மனு அளித்தனர். அதில், 'கோவை போன்ற பெருநகரங்களில், பல இடங்களில் ஆடு மாடுகளை பொது இடத்தில் வெட்டுவது அதிகரித்து வருகிறது . விலங்கினங்களை துன்புறுத்துவதற்கு பல கட்டுப்பாடுகள் இருக்கின்றபோது, மக்கள் அதிகமாக பயணம் செய்யும் செல்வபுரம் ஆத்துப்பாலம், போத்தனூர் போன்ற பகுதிகளில் குர்பானி கொடுக்கும் நிகழ்ச்சியை சிலர் நடத்துகின்றனர். இது சுகாதார சீர்கேட்டை ஏற்படுத்துவதுடன் பொதுமக்களை முகம் சுளிக்க வைக்கிறது. கொரோனா தொற்று பரவிவரும் சூழலில், இது போன்று பொது இடத்தில் கால்நடைகள் வெட்டப்படுவது நோயை அதிகரிக்கும். அதற்கென இறைச்சி கூடம் என்ற இடம் உள்ளது . எனவே அந்த இடங்களிலே அதை வெட்ட வேண்டும். எனவே குர்பானி போன்ற நிகழ்ச்சிக்கும் பொது இடத்தில் ஆடு, மாடுகள், ஒட்டகம் வெட்டப்படுவதை தடுக்க, மாவட்ட நிர்வாகமும் காவல்துறையும் தடைவிதிக்க வேண்டும்' என்று மனுவில் தெரிவிக்கப்பட்டிருந்தது.

# ஓ.பி.எஸ். அறிக்கை

தேசியமும் தெய்வீகமும் எனது இரு கண்கள் என்று கூறிய பசும்பொன் முத்துராமலிங்கத்தேவர் பிறந்த தமிழகத்தில் தேசியத்திற்கு எதிரான செயல்கள் தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டிருப்பதை பார்க்கும்போது தமிழகம் திசைமாறி செல்கிறதோ என்ற எண்ணம் பொதுமக்களிடையே மேலோங்கி நிற்பதாக அ.தி.மு.க ஒருங்கிணைப்பாளர் ஓ.பன்னீர்செல்வம் தெரிவித்துள்ளார். இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், "திமுக ஆட்சி தமிழ்நாட்டில் அமைந்ததிலிருந்து மத்திய அரசை ஒன்றிய அரசு என்று குறிப்பிட்டு வருவது வாடிக்கையாகிவிட்டது. இதற்கான காரணத்தை முதலமைச்சர் ஸ்டாலின் சட்டப்பேரவையிலேயே அளித்திருப்பது விசித்திரமாக இருக்கிறது. அதிலே சட்டத்தில் இல்லாததை நாங்கள் பயன்படுத்தவில்லை. ஒன்றியம் என்பது தவறான சொல் அல்ல என்றும் மாநிலங்கள் ஒன்று சேர்ந்தது என்பதுதான் பொருள் என்றும் தெரிவிக்கப்பட்டு இருக்கிறது. இந்த ஒப்பீடு நியாயமானதாக, பொருத்தமானதாக இல்லை. பாரத நாடு பிரிக்கப்பட முடியாத ஒன்றிணைக்கப்பட்ட ஒரு தேசம் என்பதைத்தான் Union of States என்ற வாசகம் நமக்கு உணர்த்துகிறது. 'ஜெய் ஹிந்த்' என்ற சொல் குறித்து ஈ.ஆர்.ஈஸ்வரன் பேசியது வருத்தமளிக்கிறது. அதனை இழிவுப்படுத்தும் வகையில் தேச இறையாண்மைக்கு எதிரான அந்த வார்த்தைகளை அவைக்குறிப்பில் இருந்து நீக்க முதல்வர் நடவடிக்கை எடுக்க வேண்டும். தேர்தல் வாக்குறுதிகளான பெட்ரோல், டீசல் விலைக்குறைப்பு, நகைக்கடன் ரத்து, கல்விக்கடன் ரத்து உள்ளிட்ட மக்கள் நலன்சார்ந்த கோரிக்கைகளை நிறைவேற்றுவதில் கவனம் செலுத்த வேண்டும்' என்று கேட்டுக் கொண்டுள்ளார்.

விஜயபாரதம்




# பொறுமையை இழந்த முதல்வர்



விஜயபாரதம்

தெலுங்கானா அரசின் பிரதான திட்டங்களில் ஒன்றாக, ஏழைகளுக்கு இரட்டை படுக்கையறை கொண்ட வீடு வழங்கும் திட்டத்தின் ஒரு பகுதியாக, கட்டுமானப் பணி நிறைவுப் பெற்று வீடுகளை பயனாளர்களுக்கு ஒப்படைக்கும் நிகழ்ச்சி சிர்சிலாவில் நடைபெற்றது. இதில் பங்கேற்க தெலங்கானா முதல்வர் சந்திரசேகர ராவ் வந்திருந்தார். ரிப்பனை வெட்டுவதற்கான கத்திரிகோல் வழங்குவதற்கு அதிகாரிகள் மறந்து விட்டனர். அதை எடுத்து வருவதற்கும் சற்று தாமதமானது. இதனால், பொறுமை இழந்த முதல்வர் சந்திரசேகரராவ், ரிப்பனை வெறும் கைகளால் கிழித்து விட்டு புதிதாக கட்டப்பட்ட வீட்டிற்குள் சென்றார். சிறிது நேரம் காத்திருக்கக்கூட பொறுமை இல்லாத முதல்வரின் இந்த செயல், அப்பகுதி மக்களிடம் சலசலப்பை ஏற்படுத்தியுள்ளது.

# இந்து முன்னணியினர் மீது வி.சி.க. தாக்குதல்



விஜயபாரதம்

அரியலூர் மாவட்டத்தில் இந்து முன்னணி துணைத் தலைவராக இருப்பவர் ரமேஷ். இவர் அப்பகுதியில் கிறிஸ்தவ மத மாற்றத்தை எதிர்த்து கேள்வி கேட்டுள்ளார். இதனால் விடுதலை சிறுத்தைகள் கட்சியை சேர்ந்தவர்கள் ரமேஷை தாக்கியதாகக் கூறப்படுகிறது. இதனைத் தொடர்ந்து தாக்குதல் நடத்திய விடுதலை சிறுத்தைகள் கட்சியை சேர்ந்தவர்களை உடனடியாக கைது செய்ய வேண்டும் என்று ஜெயங்கொண்டத்தில் இந்து முன்னணி கட்சியை சேர்ந்தவர்கள் தர்ணா போராட்டத்தில் ஈடுபட்டனர். அப்போது அங்கு வந்த காவல்துறையினர் தாக்கியவர்கள் மீது எந்த நடவடிக்கையும் எடுக்காமல் ஆர்ப்பாட்டம் நடத்தியவர்களை கைது செய்தனர்.

# தி.மு.க. குறித்து அன்புமணி



விஜயபாரதம்

தமிழகத்தில் தி.மு.க அரசு பொறுப்பேற்ற பிறகு, மத்திய அரசை, ஒன்றிய அரசு ஒன்று அழைப்பதை முதலமைச்சர் மற்றும் அமைச்சர்கள் வாடிக்கையாகக் கொண்டுள்ளனர். இதற்கு பாஜக உள்ளிட்ட கட்சியினர் கடும் எதிர்ப்பு தெரிவித்து வருகின்றனர். இந்த நிலையில், பா.ம.க நிழல் நிதிநிலை அறிக்கை வெளியிட்ட பிறகு செய்தியாளர்களிடம் அக்கட்சியின் இளைஞரணித் தலைவர் அன்புமணி பேசினார். அப்போது, அவர், 'எங்களைப் பொறுத்தவரையில் மத்திய அரசு என்றுதான் நாங்கள் அழைப்போம். பெயரை மாற்றி அழைப்பதால் எதுவும் நடக்கப்போவதில்லை. திமுக ஆட்சிக்கு வந்தால் பெட்ரோல், டீசல் விலையை குறைப்பதாக தெரிவித்தது. ஆனால், தற்போது தேதி சொல்லவில்லை என்கின்றனர். அது ஆக்கப்பூர்வமான கருத்து இல்லை. தற்போதைய சூழலுக்கு ஒன்று அல்லது இரண்டு ரூபாய் வரை குறைக்கலாம்' எனக் கூறினார்.

# ஐ.சி.எம்.ஆர். ஆய்வில் தகவல்

விஜயபாரதம்

இந்திய மருத்துவ ஆராய்ச்சி கவுன்சில் (ஐ.சி.எம்.ஆர்) சார்பில், கோவிஷீல்டு தடுப்பூசி செலுத்தப்பட்டோரிடம் சமீபத்தில் ஒரு ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. அந்த ஆய்வில் ஒரு டோஸ் தடுப்பூசி செலுத்தப்பட்டோரில், 58.1 சதவீதம் பேரிடம், தற்போது பரவி வரும் கொரோனாவின் டெல்டா வைரசை எதிர்க்கும் நோய் எதிர்ப்பு சக்தி தென்படவில்லை. இரண்டு டோஸ் எடுத்தவர்களில், 16.1 சதவீதம் பேரிடம், நோய் எதிர்ப்பு சக்தி தென்படவில்லை. முழுமையான பலன், பாதுகாப்பு பெறுவதற்கு, மூன்றாவது டோஸ் செலுத்துவது சிறந்ததாக இருக்கும். அதே நேரத்தில் வைரஸ் தொற்று ஏற்பட்டு, அதன்பின் தடுப்பூசி எடுத்துக் கொண்டவர்களிடம், நோய் எதிர்ப்பு சக்தி அதிகமாக உள்ளது. வைரஸ் பாதிப்பு ஏற்பட்டோருக்கு, ஒரு டோஸ் தடுப்பூசியே போதுமானதாக இருக்கும் என கூறப்பட்டுள்ளது.



விஜயபாரதம்

## ஹைபிரிட் பயங்கரவாதிகள்

காஷ்மீரில் பாதுகாப்புப் படையினர் ஹைபிரிட் பயங்கரவாதிகள் எனும் ஒரு புதிய சவாலை எதிர்கொண்டு வருகின்றனர். பகுதி நேர பயங்கரவாதிகளாக செயல்படும் இந்த ஸ்லீப்பர் செல்கள், தங்கள் தலைமையிடம் இருந்து கட்டளைகள் வரும்வரை தனது அன்றாட தொழிலை செய்து வருவார்கள். யாருக்கும் சந்தேகம் ஏற்படாது. கட்டளைகள் வந்தவுடன், இவர்கள் தங்கள் பயங்கரவாத செயலை செய்துவிட்டு மீண்டும் தங்களது வழக்கமான வேலைகளில் ஈடுபடுவார்கள். இதனால் இவர்களை கண்டறிவது கடினம். சமீபத்தில் நடைபெற்ற பல தாக்குதல்கள் இந்த வகையை சேர்ந்தவையே. பாகிஸ்தானின் ஐ.எஸ்.ஐ வழிகாட்டுதலின்படி காஷ்மீரில் இவ்வகையான தாக்குதல்கள் மேற்கொள்ளப்படுகின்றன. எனினும் இதனையும் நாங்கள் வெற்றிகரமாக முறியடிப்போம்' என காஷ்மீர் காவல்துறை ஐ.ஜி விஜயகுமார் தெரிவித்துள்ளார்.

## முஸ்லிம்கள் வளர்ச்சிக்கு வழி

அசாமில் வாழும் முஸ்லிம்களின் நலனுக்காக அவர்களது மதத்தைச் சேர்ந்த 150 முக்கிய நிர்வாகிகள் மற்றும் தலைவர்களை சந்தித்தார் அசாம் முதல்வர் ஹிம்மந்த் பிஸ்வாஸ் சர்மா. அதில், சிறுபான்மையினர் நலனுக்காக அரசு ஏற்படுத்தியிருக்கும் நலத்திட்டங்கள் குறித்து அவர்களிடம் விவரித்தார். அவர்களிடம், அசாம் மாநில முஸ்லிம்கள் 2 குழந்தைகளுக்கு மேல் பெற்றுக்கொள்ளக் கூடாது. இதனால் மாநில மக்கள்தொகை கட்டுக்குள் இருக்கும். மாநிலம் வளர்ச்சி அடையும்' என கூறினார். பின்னர் இது குறித்து கருத்து தெரிவித்த அவர், அசாமில் பொருளாதார வளர்ச்சியை ஏற்படுத்த இந்த சந்திப்பு உதவியது. இரண்டாம் கட்டப் பேச்சுவார்த்தையின்போது வங்காள மொழி பேசும் முஸ்லிம் ஒருங்கிணைப்பாளர்கள் அழைக்கப்படுவார்கள். அசாமில் உள்ள முஸ்லிம்களின் சுகாதாரம், கல்வித்தரம், மக்கள் தொகை கட்டுப்பாடு, கலாச்சார மேம்பாடு, பொருளாதார மற்றும் அறிவுசார் வளர்ச்சி ஆகியவற்றை மேம்படுத்த பா.ஜ.க அரசு தீவிர முயற்சி மேற்கொள்ளும். இவர்களுடனான இந்த கூட்டத்தின் முடிவை இன்னும் மூன்று மாத காலத்திற்குள் பத்திரிகைகள் பார்வைக்கு வெளியிடப்படும் என்று தெரிவித்தார்.

விஜயபாரதம்



# ராஜீவ் சர்மா மீண்டும் கைது


விஜயபாரதம்

கடந்த ஆண்டு சீனாவுக்கு உளவு பார்த்ததாக டெல்லி காவல்துறையினர் ராஜீவ் சர்மாவை கைது செய்தது. அவருடன் நெருக்கமாக இருந்த சீன பெண், நேபாள இளைஞர் ஆகியோரையும் காவல்துறையினர் கைது செய்தனர். பத்திரிகையாளர் ராஜீவ் சர்மா பல்வேறு நாளேடுகளிலும் பணியாற்றிய அனுபவமுடையவர். இவர் பிறகு ஃப்ரீலான்ஸ் பத்திரிகையாளராக பல்வேறு பத்திரிகைகளில் எழுதிவந்தார். சீனாவின் 'தி குளோபல் டைம்ஸ்' நாளேட்டிலும் அதிகமாக எழுதி வந்தார். இவர், இந்தியாவின் பாதுகாப்பு குறித்த ஒவ்வொரு தகவலுக்கும் ஆயிரம் அமெரிக்க டாலரை சீனாவிடம் இருந்து பெற்றுள்ளார். அவ்வகையில் அவர், ரூ. 40 லட்சம் பெற்றுள்ளார். அவரிடம் இருந்த பாதுகாப்புத் துறை சார்ந்த பல்வேறு ஆவணங்களும் கண்டுபிடிக்கப்பட்டன. இவர் கடந்த 2016ம் ஆண்டிலிருந்து 2018ம் ஆண்டுவரை இந்தியாவின் பல்வேறு பாதுகாப்புத் தகவல்லை சீனாவுக்கு தெரிவித்தது விசாரனையில் தெரியவந்தது. சீன உளவுத்துறையினரும், சர்மாவும் பாரதம் உட்பட பல்வேறு நாடுகளில் சந்தித்துள்ளார்கள். இந்நிலையில் நேற்று ராஜீவ் சர்மா மீண்டும் கைது செய்யப்பட்டுள்ளதாக அமலாக்கப் பிரிவு தெரிவித்துள்ளது. சீனாவுக்கு உளவு பார்த்ததால் அவருக்கு ஹவாலா முறையில் பணம் கொடுக்கப்பட்டுள்ளது. இதனை பினாமி வங்கி கணக்கு மூலம் ராஜீவ் சர்மா பெற்று வந்திருக்கிறார். இதனையடுத்து ராஜீவ் சர்மா, அன்னிய செலாவணி மோசடி சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டுள்ளார்.

# ஊர் திரும்பிய 10 லட்சம் பேர்

கேரள அரசு வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில், 'கடந்த 2020 மே மாதம் முதல், இந்த ஆண்டு மே மாதம் வரையிலான காலகட்டத்தில், கேரளாவில் இருந்து சுமார் 27 லட்சம் பேர் வெளிநாடுகளுக்கு பயணம் செய்துள்ளனர். அதில், 14,63,176 பேர், மீண்டும் கேரளாவுக்கு திரும்பி உள்ளனர். இவர்களில், 10 லட்சத்து 45 ஆயிரத்து 288 பேர் வெளிநாடுகளில் தங்கள் வேலைகளை இழந்ததால் ஊர் திரும்பி உள்ளனர். 2.90 லட்சம் பேர், முடிவுக்கு வந்த விசா உள்ளிட்ட காரணங்களால் நாடு திரும்பி உள்ளனர். இதில் 96 சதவீதம் பேர் ஐக்கிய அரபு எமிரேட்ஸ், சவுதி அரேபியா, கத்தார், ஓமன் உள்ளிட்ட நாடுகளில் இருந்து திரும்பி வந்தவர்கள்' என தெரிவிக்கப்பட்டுள்ளது.

விஜயபாரதம்




# உளவுத்துறை எச்சரிக்கை



விஜயபாரதம்

ஜூன் 27 அன்று ஜம்முவில் உள்ள விமானப்படை நிலையத்தில் இரட்டை டிரோன் தாக்குதலுக்குப் பிறகு, உளவுத்துறை தற்போது ஒரு எச்சரிக்கை விடுத்துள்ளது. அதன்படி, 'தமிழகத்தின் கடலோரப் பகுதிகள் மற்றும் கேரளாவின் தெற்குப் பகுதிகளில் டிரோன் தாக்குதல் நடத்தப்பட வாய்ப்புள்ளது' என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. முன்னதாக, இலங்கையில் உள்ள ஹம்பாந்தோட்டா துறைமுகத்தை சீனா கையகப்படுத்திய பின்னர், கடலோர காவல்படை, இந்திய கடற்படைகளை உளவுத்துறை உஷார் படுத்தியுள்ளது என்பதும், ராணுவத் தலைவர் எம். எம். நாரவனே, பயங்கரவாதிகளுக்கும் பொதுமக்களுக்கும் டிரோன்கள் எளிதில் கிடைப்பது குறித்தும், அது எவ்வாறு நாட்டில் பாதுகாப்பில் சவால்களை ஏற்படுத்தியுள்ளது என்பது குறித்தும் ஒரு அறிக்கை வெளியிட்டிருந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது. இது குறித்து கருத்து தெரிவித்த கேரள காவல்துறைத் தலைவர் அனில் கான்ட், 'டிரோன் தாக்குதலுடன் தொடர்புடைய அச்சுறுத்தல்களை முறியடிக்க, மாநிலத்தில் டிரோன் ஆராய்ச்சி ஆய்வகம் அமைக்கப்படும்' என அறிவித்திருந்தார்.

# விளம்பரத்திற்கு 155 கோடி




விஜயபாரதம்

மகாராஷ்டிராவை சேர்ந்த சமூக ஆர்வலர் அனில் கல்காலி என்பவர் தகவல் அறியும் உரிமை சட்டத்தில் கேட்ட கேள்விக்கு பதில் அளித்துள்ள ஆணையம், சிவசேனா தலைமையிலான மகாராஷ்டிரா அரசு 2019 டிசம்பர் 11 முதல் 2021 மார்ச் 12 வரை விளம்பரத்திற்காக 155 கோடி ரூபாய் செலவிட்டுள்ளது. ஒவ்வொரு மாதமும் ரூ. 9.6 கோடி விளம்பர பிரச்சாரங்களுக்கு செலவிட்டுள்ளது. 16 மாதங்களில் சமூக ஊடகங்களுக்கு மட்டும் சுமார் 5.99 கோடி செலவிடப்பட்டுள்ளது என தெரிவிக்கப்பட்டுள்ளது. 'இதில் சமூக ஊடக செலவு, படைப்பாளிகளுக்கான செலவினம் என்ற தகவல்கள் பல சந்தேகங்களை எழுப்பியுள்ளது. ஆணையம் வழங்கியதை விட விளம்பர செலவுகள் அதிகமாக இருக்கலாம்' என அனில் கல்காலி சந்தேகம் தெரிவித்துள்ளார். இதனிடையே, 'எங்கள் பதவிக்காலத்தில், விளம்பரத்திற்காக ரூ. 26 கோடி மட்டுமே செலவிட்டோம். ஆனால், தற்போதைய அரசு விளம்பரத்திற்காக ரூ. 246 கோடியை செலவிடுட்டுள்ளது என்ற தகவல் வந்துள்ளது. இதில் முறையான விசாரணை தேவை. கொரோனா காலத்தில், வருவாய் குறைந்துள்ள நேரத்தில் விளம்பரத்திற்காக இவ்வளவு செலவு செய்ய என்ன தேவை? ' என பா.ஜ.க தலைவரும் முன்னாள் முதல்வருமான தேவேந்திர ஃபட்னாவிஸ் கேள்வி கேட்டுள்ளார்.

# முன்னேறும் தாலிபான்கள்



விஜயபாரதம்

ஆப்கானிஸ்தானில் 20 ஆண்டுகளாக நடந்து வரும் உள்நாட்டுப் போரை முடிவுக்குக் கொண்டு வருவதற்காக, அமெரிக்க அரசு, தலிபான் பயங்கரவாதிகளுடன் கடந்த ஆண்டு ஒப்பந்தம் போட்டது. அதன்படி, ஆப்கானிஸ்தானில் இருந்து அமெரிக்க படைகளை முழுமையாக திரும்ப பெறும் பணிகள் முழுவீச்சில் நடந்து வருகின்றன. ஆனால், அமெரிக்க படைகளின் வெளியேற்றம் காரணமாக ஆப்கானிஸ்தானில் தலிபான்களின் கை ஓங்கி வருகிறது. நாட்டிலுள்ள முக்கிய மாகாணங்களை தலிபான் பயங்கரவாதிகள் கைப்பற்றி வருகின்றனர். தற்போது, வடமேற்கு பகுதியில் தஜிகிஸ்தான் நாட்டின் எல்லையையொட்டி அமைந்துள்ள படாக்ஸ்கான் மாகாணத்தில் ஒரே இரவில் 3 மாவட்டங்களை தலிபான்கள் கைப்பற்றினர். தலிபான்களுக்கு பயந்து 300க்கும் மேற்பட்ட ராணுவ வீரர்கள் தஜிகிஸ்தான் நாட்டுக்கு ஓடிவிட்டனர். படாக்ஸ்கான் மாகாணத்தில் கடந்த 3 நாட்களில் 10 மாவட்டங்களை தலிபான் பயங்கரவாதிகள் கைப்பற்றியுள்ளனர். 8 மாவட்டங்களில் மோதல்கள் நடந்து வருகின்றன என அம்மாகாண அரசு அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.


விஜயபாரதம்

தேசிய வார இதழ்

எண். 79, முதல் தளம், டாக்டர் அழகப்பா சாலை,
புரசைவாக்கம், சென்னை – 600 084

| | | |
|---|---|---|
| A/C Name | : | Bharathiya Kalachara Samithi Vijaya Bharatham, |
| Branch | : | INDIAN BANK, Alagappa Road Branch |
| A/C NO | : | 948422415 |
| IFS Code | : | IDIB000D036 |
| 1 year | : | Rs.600 |
| 2 year | : | Rs.1150 |
| 5 year | : | Rs.2750. |

G Pay PhonePe paytm

சந்தா செலுத்தியபின் உங்கள் பெயர், முகவரி, தொலைபேசி தகவல்களை தவறாமல் விஜயபாரதத்திற்கு தெரிவிக்கவும்

email. vijayabharatham78@gmail.com
Phone : 044 26421271, 26420870
SMS / : 9600478526,

# சீன ஆதரவு ஊடகங்கள்



விஜயபாரதம்

ஒரு தன்னார்வலர், அமெரிக்க நீதித் துறையில் தாக்கல் செய்த ஒரு ஆவணத்தின்படி, சீனா, அமெரிக்க நாளிதழ்கள், பத்திரிகைகளுக்கு விளம்பரம் என்ற பெயரில் கோடிக்கணக்கான பணத்தை அளித்துள்ளது என்பது தெரியவந்துள்ளது. இது சீனாவின் உலகளாவிய ஆதிக்கம் செலுத்தும் முயற்சியாகவே கருதப்படுகிறது.

**யாருக்கு எவ்வளவு?**

சீன கம்யூனிஸ்ட் கட்சியால் நடத்தப்படும், செய்தித்தாள் சீனா டெய்லி பத்திரிகை வாயிலாக விளம்பரம் என்ற பெயரில், கடந்த 6 மாதங்களில் மட்டும், டைம் இதழுக்கு 700,000 டாலர்கள், பைனான்சியல் டைம்ஸுக்கு 1 371,577 டாலர்கள், பாரின் பாலிசி இதழுக்கு 291,000 டாலர்கள், லாஸ் ஏஞ்சல்ஸ் டைம்ஸுக்கு 272,000 டாலர்கள், தி டெஸ் மொய்ன்ஸ் ரிஜிஸ்டருக்கு 34,600 டாலர்கள், சி.க்யூரோல் 76,000 டாலர்கள் என வழங்கப்பட்டுள்ளது. மேலும், சீனாவில் தடைசெய்யப்பட்ட டுவிட்டருக்குகூட 265,822 டாலர் தரப்பட்டுள்ளது.

**இவை மட்டுமா?**

இந்த முன்னணி பத்திரிகைகள் மட்டுமல்ல, தி சியாட்டில் டைம்ஸ், தி அட்லாண்டாஜர்னல் கான்ஸ்டிடியூஷன், தி சிகாகோ ட்ரிப்யூன், தி ஹூஸ்டன் க்ரோனிகல் மற்றும் தி பாஸ்டன் குளோப் போன்ற பத்திரிகைகளுக்கும் விளம்பரம் என்ற பெயரில் கோடிக்கணக்கில் பணம் அளிக்கப்பட்டுள்ளது.

**எதற்காக?**

கொரோனா பரப்புதல், நாடு பிடித்தல், எல்லை ஆக்கிரமிப்பு என உலக அளவில் கெட்டு வரும் தன் பெயரை தூக்கி நிறுத்துவது, அந்த ஊடகங்கள் மூலம் அந்நாட்டு அரசுகளுக்கு மறைமுக அழுத்தம் கொடுப்பது. தங்கள் எண்ணத்தையும் கலச்சாரத்தையும் பரப்புவது, குறிப்பிட்ட பத்திரிகைகள் மூலம் அந்த நாட்டுக்கு எதிராக அவதூறு செய்திகள் பரப்புவது, கலகம் ஏற்படுத்தி அமைதியை சீர்குலைப்பது, இட்துசாரி சித்தாந்தத்தை பரப்புவது போன்றவற்றிற்காகவே சீனா இந்த முயற்சியை மேற்கொள்கிறது என்று வல்லுனர்கள் கருத்து தெரிவித்துள்ளனர்.

**பாரதத்தில்:**

சமீபத்தில்கூட தி நியூயார்க் டைம்ஸ் பத்திரிகை, பா.ஜ.க குறித்தும் பிரதமே மோடி குறித்தும் அவதூறாக எழுத நமது நாட்டிலேயே ஆட்கள் தேடி விளம்பரம் செய்தது, சமீப காலமாக தி ஹிந்து நாளிதழ்கள் சீனாவின் விளம்பரங்களை முழுப்பக்க அளவில் வெளியிட்டு வருவது போன்றவை இங்கு நினைவு கூரத்தக்கது.

சுவாரஸ்யமாக, தி ஹிந்து வெளியிட்டுள்ள சீனாவின் விளம்பரம், பார்ப்பதற்கு வழக்கமான ஒரு அறிக்கையையும் போலவே தோன்றும். ஆனால், அதனை சற்று நெருக்கமாக ஆராய்ந்தால், அந்த முழு பக்க விளம்பரமும் சீனாவின் கருத்துத் திணிப்பாக இருப்பது நன்றாக விளங்கும்.

மதிமுகன்

# வலையில் சிக்கிய மீம்கள் . . .








வான்நிலா..
ஊபிஸ்
Mla முன்னாடி மினிஸ்டர்
நிக்கிறதும் காலு கட்டை விரல
கிளீன் பண்றதும் தான்டா புதிய
சமூகநீதி...... சுயமரியாதை..!!


JUST IN
சென்னையில் 4 புதிய பூங்காக்கள்!
சென்னையில் ரூ.2,500 கோடி மதிப்பீட்டில்
பக்கிங்ஹாம் கால்வாய், எண்ணூர்,
முட்டுக்காடு, கோவளம் ஆகிய 4 பகுதிகளில்
புதிய பூங்காக்கள் அமைக்கப்படும் என
அமைச்சர் கே.என்.நேரு அறிவிப்பு!


எம்மா ஜோதிகா வெளியே வாம்மா
ஆஸ்பத்திரி கட்டணும்னு சொன்னியே
இங்க 2.500கோடிக்கு பூங்கா கட்டுறாங்கம்மா
வெளியே வந்து என்னானு கேளு

# வங்கம் தந்த சிங்கம்



விஜயபாரதம்

சுதந்திரம் பெற்ற பின் காங்கிரஸார் அல்லாத இருவர் அரசியல் நிர்ணய சபையின் உறுப்பினர்களாக, மத்திய மந்திரிகளாகப் பொறுப்பேற்றனர். அதில் ஒருவர் அகில பாரதிய ஹிந்து மஹா சபா தலைவர் டாக்டர் சியாமா ப்ரஸாத் முகர்ஜி. சுதந்திர நாட்டின் முதல் வணிக, தொழில் துறை அமைச்சர். அடுத்தவர் பாபா சாஹேப் அம்பேத்கர்.

தேசப் பிரிவினையால் நம் மக்கள் மாபெரும் இன்னல்களைச் சந்தித்து சொந்த நாட்டிலேயே அகதிகளாய் மாறினர். அதன் பின்னரும் “நேரு – லியாகத் அலி ஒப்பந்தம்” என்ற பெயரில், நேரு தொடர்ந்த சிறுபான்மை சமரச நடவடிக்கைகளை எதிர்த்த சியாமா ப்ரஸாத் முகர்ஜி, மந்திரி சபையிலிருந்து விலகினார்.

21/10/1951ல், காங்கிரசுக்கு கடிவாளமிட “பாரதிய ஜன சங்கம்” என்ற புதிய கட்சியைத் தொடங்கினார். சுதந்திர பாரதத்தில் நடைபெற்ற முதல் தேர்தலிலேயே ஜன சங்கம் மூன்று தொகுதிகளை வென்றது. பாராளுமன்ற ஜனநாயகத்தில் முறைப்படி அடியெடுத்து வைத்தது. டாக்டர் முகர்ஜி தலைமையில் 32 பாராளுமன்ற உறுப்பினர்கள், 10 மாநிலங்களவை உறுப்பினர்கள் இணைந்து தேசிய ஜனநாயக் கட்சி உருவானது.

தனித்திருந்த சமஸ்தானங்கள் அனைத்தும் விடுதலைக்குப் பின் நம் தேசத்தின் ஓர் அங்கமாகத் இணைந்தன. அனால், ஜம்மு காஷ்மீர் மாகாணத்தில் மட்டும் குழப்பம் தீரவில்லை.

ஜம்மு காஷ்மீருக்கெனத் தனி அரசியல் சாசனம், தனிக் கொடி, தனிப் பிரதமா் என அரசியல் சாசனப் பிரிவு 370இன் பெயரில் ஏகப்பட்ட அவலங்கள் நேருவால் அரங்கேறின. இதனை ஜனசங்கம் எதிர்த்து போராடியது.

ஜம்மு காஷ்மீர் விவகாரத்தைத் தீர்த்து வைக்கும் நோக்கத்தோடு ஜம்மு நோக்கிப் புறப்பட்டார் முகர்ஜி. அனுமதி இல்லாமல் உள்ளே நுழைந்தார் எனக் கூறி கைது செய்யப்பட்டார். டாக்டர் சியாமா ப்ரஸாத் முகர்ஜி 1953 ஜூன் 23ல் உடல் நலக் குறைவால் இறந்ததாக அறிவித்தது ஷேக் அப்துல்லா அரசு.

“ஒரே நாடு! ஒரே சட்டம்!” என்ற கொள்கையை வலியுறுத்த உயிர் துறந்தார் டாக்டர் சியாமா ப்ரஸாத் முகர்ஜி.

காஷ்மீர் சட்டப்பரிவு 370 நீக்கப்பட்டு, அவரது கனவு இன்று நிறைவேறியுள்ளது என்பது நமக்கெல்லாம் பெருமை.